*KALAM International Research Journal*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*
*15(1), 2022*

# இலங்கையில் மத கடும்போக்குவாதமும் சமூக நல்லிணக்கமும்: ஒரு விமர்சன நோக்கு

**எம்.ஏ.எஃப். அஸ்மியா[1] & வி. கமலசிறி[2]**
[1, 2]அரசியல் விஞ்ஞானத்துறை, இலங்கை தென்கிழக்குப் பழ்கலைக்கழகம்.

Correspondence: kamalsv08@seu.ac.lk

**கட்டுரைச் சுருக்கம்**

இலங்கையில் யுத்தத்திற்கு பின்னரான மீள் ஒருங்கிணைத்தல் செயன்முறையில் சமூக நல்லிணக்கம் என்ற கருத்தாடலானது முக்கியத்துவம் பெற வருகிறது. பொதுவாக சமூக நல்லிணக்கம் என்பது வேறுபட்ட குழுக்களிடையே காணப்படும் வித்தியாசங்களைப் பொருட்படுத்தாமல் இணங்கி வாழச் செய்வதை பற்றிய சிந்தனைகளை குறிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது. எனினும் யுத்தத்திற்கு பின்னரான இலங்கையில் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது என்பது சவாலான ஒன்றாகவே காணப்படுகின்றது. அந்தவகையில் இலங்கை மக்களுக்கிடையே சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் செல்வாக்கு செலுத்தும் பல்வேறு காரணிகளுள் முக்கிய காரணியாக மத கடும்போக்குவாதம் அடையாளப்படுத்தப்படுகின்றது. இது இலங்கையில் சமூக நல்லிணக்கம் குறித்த பார்வையை சிக்கலான மற்றும் சவால் நிறைந்த ஒன்றாக மாற்றியுள்ளது. எனவே இவ்வாய்வானது யுத்தத்திற்கு பின்னரான இலங்கையின் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் மத கடும்போக்குவாதம் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களையும் சவால்களையும் குறித்து ஆய்வு செய்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வகையில் இக்கட்டுரை பண்புரீதியிலான முறையியலின் அடிப்படையில் இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு விபரணப்பகுப்பாய்வு முறை ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு முடிவுகளின்படி, யுத்தத்திற்கு பின்னரான இலங்கையில் பௌத்த மதரீதியிலான கடும்போக்குவாத செயற்பாடுகள் வீரியமடைந்துள்ளதுடன், ஒரு சில குழுக்கள் இஸ்லாமிய மதரீதியிலான தீவிரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தமையினையும் அறியமுடிகிறது. இந்நிலைமையானது இலங்கை சமூகங்களுக்கிடையே காணப்படுகின்ற நம்பிக்கை, சகிப்புத்தன்மை மற்றும் நல்லுறவை பாதிப்புக்குட்படுத்துவதுடன் சமூகங்களுக்கிடையிலான சமூக நல்லிணக்கம் ஏற்படுவதற்கும் பெரும் சவாலாக அமைவதையும் இவ்வாய்வு வெளிப்படுத்தியுள்ளது.

**பிரதான சொற்கள்:** பன்மைத்துவம், யுத்தம், மதகடும்போக்குவாதம், சமூகநல்லிணக்கம், சகிப்புத்தன்மை

## *1.* அறிமுகம்

நவீன ஜனநாயக நாடுகளில் சமூக நல்லிணக்கம் குறித்த கருத்தாடல் முக்கிய கவனயீர்ப்பைப் பெறுகிறது. அதிலும் குறிப்பாக, பன்மைத்துவக் கலாசார நாடுகளில் நீண்டகால சிவில் யுத்தமொன்றின் பின்னர் அதன் முக்கியத்துவம் அலாதியானது. பொதுவாக, சமூக நல்லிணக்கம் என்பது எந்த ஒரு குறிப்பிட்ட சமூகத்திலும் உள்ள மக்களின் மீது அவர்களின் மதம், சாதி, பாலினம், இனம், வயது, மற்றும் தொழில் போன்றவற்றை பொருட்படுத்தாமல் அவர்களுக்கிடையில் காணப்படும் மத சகிப்புத்தன்மை, அன்பு, நம்பிக்கை, அமைதி, நல்லிணக்கம், மரியாதை, பெருந்தன்மை, மற்றும் சமத்துவத்தை வெளிப்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்குமான மதிப்பீட்டு செயல்முறையினைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது (Sharma, 2015; Singh, 2016).

மேலும், Galla (2009) என்பவர் சமூக நல்லிணக்கம் என்பது சிவில் சமூகத்தில் சமநிலை மற்றும் கூட்டுறவை பேணுவதுடன் தொடர்புடைய விடயமாகும் என்கின்றார். அதாவது ஒவ்வொரு மனித குழுவிற்கும் தனித்தன்மையும் வெவ்வேறு விதமான மரபுகளும் காணப்படும். எனவே இக்குழுக்களுக்கிடையில் சமூக நல்லிணக்கத்தை அடைய வேண்டுமெனில் வேறுபட்ட கலாசாரங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு,

மரியாதை, அதிகார உறவுகளுக்கிடையிலான சமநிலையின் அளவைப் பேணல், மோதலுக்கான திறன் கொண்ட குழுக்களின் செயற்பாடுகள் மற்றும் வளங்களை நிருவகித்தல் போன்றன முக்கியமானதாகும் (Sumbulah & Purnomo, 2018). உண்மையிலேயே மனிதர் ஒருவருக்கொருவர் இணக்கப்பாட்டுடனும் சமூகமாகவும் வாழ்வதற்கு சமூக நல்லிணக்கம் அவசியமானதாகும் (Sharma, 2015). எனவே பன்மைத்துவக் கலாசார நாடுகளைப் பொறுத்தவரை சமூக நல்லிணக்கத்தை பேணுவது அத்தியவசியமானதாகும் என்பது தெளிவாகின்றது.

அந்தவகையில், உலகத்தில் காணப்படும் பன்மைத்துவ சமூக அமைப்புக்களை கொண்டிருக்கும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். உலகின் நான்கு பெரும் மதங்களான பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற மதங்களைப் பின்பற்றும் மக்கள் இலங்கையில் பரவலாக வாழ்கின்றனர். குறிப்பாக இலங்கையில் பௌத்தர்கள் பெரும்பான்மையினராகக் காணப்படுவதோடு, மொத்த சனத்தொகையில் 70.19 சதவீதமானவர்களாகவும், இந்துக்கள் 12.6 சதவீதமானவர்களாகவும் முஸ்லிம்கள் 9.4 சதவீதமானவர்களாகவும், கிறிஸ்தவர்கள் 7.6 சதவீதமானவர்களாகவும் காணப்படுகின்றனர் (Department of Census and Statistics, 2012). எனினும், இலங்கை மக்களை மத அடிப்படையில் வகைப்படுத்துகின்ற போது சிக்கல்கள் தோன்றுகின்றன. குறிப்பாக, கிறிஸ்தவர்கள் சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இரு சமூகத்திலும் கலந்திருப்பதனால் மதரீதியான அடையாளம் அவர்களது இனத்துவ அடையாளத்துடன் முரண்படுகின்ற போக்கினை அவதானிக்க முடிகிறது.

இலங்கையின் வரலாற்றைப் பொறுத்தவரையில் இன-மத அடிப்படையிலான மோதல்களும் புரிந்துணர்வின்மையும் பிரித்தானிய காலனித்துவ காலத்திலேயே ஆரம்பித்து விட்டன. பிரித்தானியர்களால் பின்பற்றப்பட்ட பிரித்தாளும் கொள்கையானது பல்லின-மத சமூகங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்தியதுடன் (Wilson, 1989) சுதந்திரத்திற்கு பின்னரான இலங்கையில் மூன்று தசாப்த கால சிவில் யுத்தத்திற்கும் வழிவகுத்தது (Fazil, 2019). எனினும் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் அனைத்துத் தரப்பினராலும் உணரப்பட்டது. எனினும், உண்மையில் அதனை ஏற்படுத்துவதில் யுத்தத்திற்கு பின்னரான சர்வதேச அழுத்தங்கள், மத பிரிவினைகள், சிறுபான்மை மக்களுக்கு எதிரான மத, கலாசார மற்றும் மொழி ரீதியான உரிமை மீறல்கள் மற்றும் மதரீதியான கடும்போக்குவாத அமைப்புக்களின் செயற்பாடுகள் போன்ற பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன (Silva, 2017). அந்தவகையில், இலங்கையில் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் செல்வாக்கு செலுத்தும் முதன்மைக் காரணிகளுள் ஒன்றாக மத கடும்போக்குவாதத்தை அடையாளப்படுத்தப்படுகிறது.

இருந்தபோதிலும், மத கடும்போக்குவாதம் என்பது தொடர்பில் ஒருமித்த கருத்து நிலை இல்லாததுடன், இது சிக்கலுக்குரிய ஒன்றாகவும் காணப்படுகின்றது. இதுபற்றி Fernando & Wiajayasiriwardhane (2020) குறிப்பிடுகையில், ஒரு மதத்தின் மீதான தீவிர நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிப்பது மத கடும்போக்குவாதம் என குறிப்பிடுகின்றனர். மற்றும் Ramakirishna (2020) கூறும் போது, ஒரு குழுவிற்கு எதிராக கட்டமைப்பு வன்முன்முறையை சட்ட பூர்வமாக்குவதற்கான அடிப்படைவாத நம்பிக்கையை கொண்ட செயற்பாடுகள் மத கடும்போக்குவாதம் என்கின்றார். மேலும், Ruthven (2007) மத கடும்போக்குவாதம் தொடர்பாக குறிப்பிடுகையில் அடிப்படைவாதத்தை மையமாகக் கொண்ட ஓர் மூலோபாயத்தில் தன்னை வெளிப்படுத்துகின்ற மத வழிமுறையை பிரதிநிதித்துவப்படுத்துவதே மத கடும்போக்குவாதம் என வரையறை செய்கின்றார் (cited in Ramakirishna, 2021). எனவே, மத கடும்போக்குவாதம் என்பது பல்வேறு கோணங்களில் அணுகப்படும் அம்சமாகவும், அதே நேரம் வன்முறையினை தன்னகத்தே வெளிப்படுத்தக் கூடிய இயல்பினைக் கொண்டதாகவும் காணப்படுகின்றமையினை அவதானிக்க முடிகிறது. அந்தவகையில், இவ்வாய்வானது யுத்தத்திற்கு பின்னரான இலங்கையின் சமூக நல்லிணக்கத்தில் மத கடும்போக்குவாதம் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களையும் மற்றும் சவால்களையும் ஆய்வு செய்வதனை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2. ஆய்வுப் பிரச்சினை

இலங்கையில் சிவில் யுத்தம் நிறைவடைந்ததை தொடர்ந்து, சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு முயற்சிகளும் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும், சமூகங்களுக்கிடையே

நல்லிணக்கத்தை கட்டியெழுப்புதல் தொடர்ச்சியாக சவால் மிக்கதொரு செயற்பாடாகவே காணப்படுகிறது. குறிப்பாக, யுத்தம் நிறைவடைந்து 13 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் இலங்கையில் சமூக நல்லிணக்கம் என்பது எதிர்பார்க்கப்பட்ட நிலையினை அடையப்பட முடியாததொன்றாக உள்ளது. மேலும், இந்நிலைக்கு எதிர்மாறாக, சமூக நல்லிணக்கமும் அதற்கான முயற்சிகளும் நாளுக்கு நாள் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றமையினையும் அவதானிக்க முடிகிறது. இந்நிலையில் அண்மைக் கால முன்னைய ஆய்வுகளிலும் இலங்கையில் சமூக நல்லிணக்கம், பௌத்த கடும்போக்குவாதம், பௌத்த-முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவு மற்றும் அவற்றில் செல்வாக்கு செலுத்துகின்ற பொதுவான காரணிகள் மற்றும் சவால்கள் தொடர்பாக கவனம் செலுத்துப்பட்டுள்ளது (McGilvray, 2016; Fowsar et al, 2020; Imtiyaz & Saleem, 2021; Ramakirishna, 2021). எனினும், அவற்றில் மத கடும்போக்குவாதம் என்பது ஒரு அம்சமாக அடையாளப்படுத்தப்படுகின்ற போதிலும், அதன் சமூக நல்லிணக்கத்தின் மீதான தாக்கம் குறித்த விஷேட கவனம் தேவைப்படுகின்றது. மேற்படி, ஆய்வு இடைவெளியினைக் கருத்திற்கொண்டு, யுத்தத்திற்கு பின்னர் வீரியமடைந்துள்ள மதரீதியான கடும்போக்குவாத செயற்பாடுகள் சமூக நல்லிணக்கத்தில் எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்பது குறித்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 3. ஆய்வு நோக்கம்

இவ்வாய்வானது யுத்தத்திற்கு பின்னரான இலங்கையில் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் மத கடும்போக்குவாதம் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் மற்றும் அதனால் ஏற்பட்டுள்ள சவால்கள் குறித்து ஆய்வு செய்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், யுத்தத்திற்கு பின்னரான இலங்கையில் அதிகரித்துவரும் மதரீதியிலான தீவிரமான செயற்பாடுகள் பல்லின சமூக கலாசார கட்டமைப்பின் மீதும் சமூக நல்லிணக்கத்தின் மீதும் ஏற்படுத்தியுள்ள எதிர்மறையான விளைவுகளையும் (Negative Impacts) ஆய்வு செய்ய முற்படுகின்றது.

### 4. ஆய்வு முறையியல்

இது ஒரு பண்பு ரீதியான ஆய்வாகும். உள்ளடக்கப் பகுப்பாய்வு முறையின் மூலம் இரண்டாம் நிலைத்தரவுகள் மீளாய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் விவரணப் பகுப்பாய்வு முறையில் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, இலங்கையில் சமூக நல்லிணக்கம் மற்றும் மத கடும்போக்குவாதம் குறித்த 40 இற்கும் மேற்பட்ட முன்னைய ஆய்வுகள் மீளாய்வு செய்யப்பட்டு ஆய்வு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதற்காக ஆய்வு சஞ்சிகைகளில் வெளியிடப்பட்ட கட்டுரைகள் (Published Articles in the Research Journals), ஆய்வு அறிக்கைகள் (Research Reports), இணையதள செய்திகள் மற்றும் தரவுகள் ஆய்வுக்கான பிரதான மூலங்களாக பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இவ்வாய்விற்காக பெரும்பாலும் இலங்கையின் சிவில் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் வெளியிடப்பட்ட ஆய்வுகளே கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளன.

### 5. முடிவும் கலந்துரையாடலும்

பன்முகக் கலாசாரக் கட்டமைப்பைக் கொண்ட இலங்கையில் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் அவையனைத்தும் நெருக்கடியில் உள்ளன. இதற்கான பிரதான காரணிகளில் ஒன்றாக, இலங்கையில் யுத்தத்திற்கு முன்னரான காலப்பகுதியில் இருந்தே படிப்படியாக வளர்ச்சியடைந்த மத கடும்போக்குவாத அமைப்புக்களையும் அவற்றின் செல்வாக்கினையும் குறிப்பிடலாம். அந்தவகையில், சுதந்திரத்திற்கு பின்னர் வரையப்பட்ட அரசியலமைப்புக்களில் பௌத்த மதத்திற்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளமையும் (Devotta, 2018; Peiris, 2019, Fowsar et al, 2020), இவ்வாறு பன்மைத்துவ நாட்டில் பௌத்தத்தை மாத்திரம் அரசின் சட்டக் கட்டமைப்பு மற்றும் தேசிய அரசியலில் முன்னுரிமைப்படுத்த முற்படுவது ஏனைய சிறுபான்மை இனத்தவர்களது மத உரிமைகள் மீறப்படுவதற்கும், அவர்கள் பாரபட்சமான முறையில் நடத்தப்படுவதற்கும் காரணமாக அமைந்தது.

மேலும், யுத்தத்திற்கு பின்னரான இலங்கையில் தவிர்க்க முடியாதவகையில் "சிங்கள- பௌத்த தேசிய வாதம்" என்ற கருத்து ஒரு சக்திவாய்ந்த கருத்தியலாக உருபெற்றுள்ளது (Zuhair, 2016). இது குறிப்பாக 2012 மற்றும் 2013 க்கு இடையிலான சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகளில் வெளிப்பட்டதுடன் (Gunathilaka, 2015) சிறுபான்மையினருக்கு எதிரான எண்ணற்ற பெரும்பான்மைப் பௌத்த தேசியவாத

குழுக்கள் தோற்றம் பெறுவதற்கும் வழிவகுத்துள்ளதாக கூறப்படுகின்றது. குறிப்பாக, பொது பல சேனா, சிங்கள ராவய, ராவய பலய, சிங்களே மற்றும் மஹாசொன் பலகாய போன்ற குழுக்களை அடையாளப்படுத்தலாம். இந்தக் குழுக்கள் அரசியலில் பௌத்தத்தை கையாள்வதனை விரும்புவதுடன், வன்முறைகளுக்கும் காரணமாகின்றன (Rameez, 2017; Ramakrishna, 2021; Akebo & Bastian, 2021). இது குறித்து, Imtiyaz மற்றும் Saleem (2021) குறிப்பிடுகையில், சிறுபான்மை என்பது சிக்கலானது என்ற உணர்வானது சிங்கள-பௌத்தர்கள் மத்தியில் வேரூன்றியிருப்பதோடு இது தமிழர்களும் முஸ்லிம்களும் ஒரு நாள் இலங்கையை ஆளுவார்கள் என்ற நிலையான அச்சத்திற்கு வழிவிட்டுள்ளது. குறித்த அச்சமானது யுத்தத்திற்கு பின்னர் சடுதியாக அதிகரித்துள்ளதுடன், இலங்கையில் மத அடிப்படையிலான உரிமை மீறல்கள், கடும்போக்குவாதம், கலவரங்கள், வன்முறைகள் மற்றும் தீவிரவாதத் தாக்குதல்கள் சிறுபான்மையினருக்கு எதிராக தொடர்ச்சியாக இடம்பெறுவதற்கும் (Ramakirishna, 2021) காரணமாக அமைகின்றது. இவை சமூகங்களுக்கிடையில் கடுமையான மதச்சகிப்பின்மையை ஏற்படுத்துவதுடன், வெளிப்படையாக சிறுபான்மையினருக்கு எதிராக விரோதத்தையும் வெறுப்பையும் பரப்புகின்றன. இதனால் இலங்கையில் சமூகங்களுக்கடையிலான நல்லிணக்கம் என்பது கேள்விக்குட்படுத்தப்படுகின்றது.

குறிப்பாக, 2012 ஆம் ஆண்டு உருவாக்கபட்ட பொது பல சேனா என்ற அமைப்பானது பௌத்த தத்துவங்களை பாதுகாத்தல் என்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட்டு பின்பு இலங்கையை சிங்கள-பௌத்த தேசமாக மாற்றுவதை தன் பிரதான நோக்கமாக அறிவித்து கொண்டது (Farzana et al, 2014; Aliff, 2015). இவ்வமைப்பின் செயற்பாடுகள், இலங்கையை தனியே பௌத்தத்தை அடிப்படையாக கொண்ட நாடாக மாற்ற வேண்டும் என்ற மதக்கடும்போக்குவாத சிந்தனையை, மிகக் குறுகியகாலப்பகுதியில் பெரும்பான்மை சிங்கள சமூகத்திடையே ஏற்படுத்துவதில் குறிப்பிடத்தக்களவு வெற்றியினையும் கண்டது. இந்நோக்கத்தை அடைவதற்காக பௌத்த தேரர்களையும் சிங்கள மக்களையும் இணைத்துக் கொண்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடல், கோசங்களை எழுப்பல் மற்றும் வன்முறையினைக் கையாளுதல் போன்ற வழிமுறைகளைப் பின்பற்றி ஏனைய சிறுபான்மையினருக்கு எதிராக செயற்படத் தொடங்கியது (Aliff, 2015).

மேற்படி, போருக்கு பின்னர் எழுச்சி பெறவந்த மத ஆதிக்கத் தேசியவாதத்தின் இலக்கு பெரும்பாலும் முஸ்லிம்களை குறிவைப்பதாகவே (Devotta, 2018, Orjuela, 2019) காணப்பட்டது. இதற்கு மத்திய கிழக்கு நாடுகளினுடைய மதச் செல்வாக்கும், அதன் காரணமாக இலங்கை முஸ்லிம்களின் மத்தியில் அதிகரித்து வரும் மத அடையாளங்களும், முஸ்லிம்களை பௌத்தர்கள் சந்தேகக் கண்ணோடு நடத்துவதற்கு காரணமாக அமைவதாக சந்தேகிக்கப்பட்டது (Aneez & Shah, 2019). குறிப்பாக, 1980களிலே இலங்கையில் முஸ்லிம் பெண்களுக்கான பள்ளி சீருடைகளின் ஒரு பகுதியாக ஹிஜாப் அறிமுகப்படுத்தப்பட்டதிலி ருந்து இலங்கையில் முஸ்லிம்கள் மத்தியில் மத அடையாளங்கள் அதிகரிக்க தொடங்கியது. அத்துடன் மத்தியகிழக்கு நோக்கிய முஸ்லிம்களின் ஈடுபாடு வெளிப்படையாக ஆடை மற்றும் கட்டிடக்கலை போன்ற துறைகளிலும் அதிக கவனத்தை ஈர்த்துள்ளது. இந்நிலைமையானது முஸ்லிகள் தீவிரவாதத்தில் இறங்குவதற்கான அறிகுறியென பெரும்பான்மையினர் மத்தியில் பயத்தை ஏற்படுத்தியதுடன் (Barakath, 2019; Morrison, 2020), இலங்கையில் மத்திய கிழக்கு சூழலை உருவாக்குவதில் முஸ்லிம்கள் ஈடுபடுவதாகவும் குற்றம் சாட்டப்படுகின்றது. அதாவது பௌத்த கடும்போக்குவாதிகளின் கருத்துப்படி 20 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையின் முஸ்லிம் பெண்கள் புடவைகளையே பயன்படுத்திய போதிலும் தற்போது பெண்கள் கறுப்பு நிற ஆடைகளையே (அபாயா) அதிகளவில் பயன்படுத்துவதாக சுட்டிக்காட்டுகி ன்றனர் (Morrison, 2020). இவ் அச்ச உணர்வானது இஸ்லாமிய சமூகத்தினரை, இலங்கையில் வாழும் ஏனைய சமூகங்கள் சந்தேகத்துடன் பார்ப்பதற்கும் அது சமூகங்களிடையேயான புரிந்துணர்வு மற்றும் நல்லிணக்கத்தினை பாதிப்பதற்கும் காரணமாகியதாக நம்பப்படுகின்றது.

எனினும், மேற்படி அச்சத்தின் பின்புலத்தில், அமெரிக்க உலகவர்த்தக மையத்தின் மீது இடம்பெற்ற 9/11 தாக்குதல் முக்கிய காரணமாக அமைகிறது. இது ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் பயங்கரவாதிகள் எனத் தவறாக வரையறுத்து அதனை உலகளாவியப்படுத்தியதுடன் (Kamalsiri, 2019), பிற்பட்ட காலங்களில் இஸ்லாமிய எதிர்ப்புவாதம் (Islamophobia) பல்வேறு நாடுகளிலும் எழுச்சி பெறுவதற்கு வழிவகுத்தது (Barakath, 2019). எனவே மேற்படி உலகளாவிய நிலைமைகள், இலங்கையில் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் பௌத்த கடும்போக்குவாதிகள் பெரும்பாண்மை மக்களின் ஆதரவைப் பெற்றதா-

கக் காண்பித்து இஸ்லாமிய எதிர்ப்புவாதத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் மத நல்லிணக்கத்தை சீர்குலைப்பதற்கும் வழிகோலியுள்ளமையினை இவ்வாய்வு வெளிக்காட்டுகின்றது. McGilvray (2011) என்பவரின் கருத்துப்படி, சர்வதேச அளவிலான இஸ்லாமிய சிந்தாந்தங்கள் குறித்த தவறான புரிதல்கள் மற்றும் தேசியவாதிகளின் போட்டிகளுக்கு இடையில் சிக்கிய இலங்கை முஸ்லிம் சமூகம் பிளவுறும் விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அதாவது உலகளவில் வளர்ந்து வரும் சூப்பிஸம் மற்றும் வஹாபிஸம் போன்ற அடிப்படைவாத சிந்தனைகளின் வளர்ச்சி, இலங்கை முஸ்லிம் சமூகங்களுக்குள் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான இஸ்லாமியப்படுத்தல் மற்றும் இஸ்லாமியம் குறித்த சர்வதேச சிந்தாந்தங்கள் உள்நாட்டு இஸ்லாமிய பதட்டங்களுக்கு காரணமாக அமைந்ததுடன் (Morrison, 2020), இந்நிலைமையானது முஸ்லிம்களை ஏனைய சமூகத்தினர் தீவிரவாதிகளாக நோக்குகின்ற நிலையினையும் அவர்களுக்கிடையிலான நல்லிணக்கத்தினையும் வெகுவாகப் பாதிப்படையச் செய்துள்ளது.

இந்நிலைமைகளினால், பௌத்த தேசியவாத அமைப்புக்கள் முஸ்லிம் சமூகம் ஜிஹாதி (இஸ்லாத்திற்காக நடத்தப்படும் போர்) கொள்கைகளை பரப்புவதாகவும், பொருளாதார சுரண்டல், கறுப்பு முகத்திரைகளினூடாக பெண் வெறுப்பினைக் வெளிப்படுத்துவதாகவும், விலங்குகளை கொடுமைப்படுத்துவதாகவும் குற்றம் சாட்டுகின்றன (McGilvray, 2016). எனினும், இதனூடாக தேசிய இனங்களில் ஒன்றான முஸ்லிம்களின் பூர்விகம், தேசத்திற்கான அவர்களின் பங்களிப்பு, அவர்களின் மத அடையாளம், மதச் சடங்குகள், நம்பிக்கைகள், அடிப்படை மரபுகள் மற்றும் நடைமுறைகள் என்பன பெருமளவில் விமர்சனத்திற்கும் எதிர்ப்பிற்கும் உட்படுத்தப்படுகின்றன (Sarjoon, 2019). இதன் எதிரொலியாக இலங்கையில் முஸ்லிம்கள் தொடர்பான ஹலால் பிரச்சினை, உணவுக்காக கால்நடைகளை அறுப்பது மனிதாபிமற்றது பௌத்த விழுமியங்களை அவமதிப்பது என்ற பொது பல சேனாவின் குற்றச்சாட்டுக்களும் மற்றும் அபாயா (முஸ்லிம் பெண்கள் அணியும் முழு நீள ஆடை), ஹிஜாப் (தலையை மறைப்பது), நிகாப் அல்லது புர்கா (முகத்தை மூடுவது) என்பவற்றிற்கு எதிரான விமர்சனங்களும் சமூக நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவித்தன. இவற்றிற்கு அப்பால், முஸ்லிம்களின் வழிபாட்டு தலங்கள் அமைந்திருந்த அனுராதபுரம், தம்புள்ளை, மஹியங்கனை, கிரான்ட்பாஸ் மற்றும் மாலிகாவத்த போன்ற இடங்களின் மீது திட்டமிட்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டமை மற்றும் திகன கலவரத்தில் முஸ்லிம்களின் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டமை (Imtiyaz & Saleem, 2015; Fowsar et al, 2020) போன்றன இஸ்லாமிய எதிர்ப்புவாதத்தின் வெளிப்பாடுகளாக கருதப்பட்டது. இது பௌத்த மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கம் வீழ்ச்சியுறுவதற்கு காரணமாக அமைந்தது.

மேலும், இலங்கையில் அதிகரித்து வரும் முஸ்லிம்களின் சனத்தொகை பெரும்பான்மையான சிங்கள மக்களுக்கு அச்சுறுத்தலாக அமையுமென்ற கடும்போக்குவாதிகளின் பிரச்சாரம், முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வுகளைத் துாண்டி தங்களின் சொந்த அரசியல், பொருளாதார மற்றும் சமூக இலக்குகளை அடைய எத்தனித்தல் (Rameez, 2017) என்பன சமூக நல்லிணக்க முயற்சிகளை பின்னிலைப்படுத்தின. இவற்றிற்கு ஒருபடி மேலாக, *2014* ஆம் ஆண்டு முஸ்லிம்கள் சிங்களவர்களின் சனத்தொகையை குறைக்க கருத்தடை மாத்திரைகளை பயன்படுத்துவதாகக் கூறி முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் (Johansson, 2018; Fazil, 2018; Fowsar et al, 2020) இலங்கையில் சமூகங்களுக்கு இடையில் சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளிகளாக அமையும் என்ற அச்சத்தினை ஏற்படுத்தியது.

எனவே யுத்தத்திற்கு பின்னர் முஸ்லிம் சமூகத்தினர் இலக்கு வைக்கப்பட்டதை போன்றே இந்துக்களும் கிறிஸ்தவர்களும் கூட, மத வெறுப்பு பிரச்சாரங்களுக்கும் வன்முறைகளுக்கும் இலக்காகின்றார்கள். குறிப்பாக, *2019* ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் வெற்றியினைத் தொடர்ந்து இலங்கையில் தமிழர்கள் மீதான எதிர்ப்பு உணர்வு புத்துயிர் பெறலாயிற்று. United State Commision on International Religious Freedom (USCIRF) அறிக்கையின்படி வடக்கில் இந்து கோவில்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாவதாகவும் அவை புத்த விகாரைகளாக மாற்றப்படுகின்றன எனவும் குற்றம் சாட்டப்படுகின்றது. மேலும் கோவில்களின் அமைவிடங்களும் பௌத்த தொல்பொருள் இடங்களென தொல்பொருள் திணைக்களத்தால் கூறப்படுகின்றன (Thamas, 2021). அதுமட்டுமன்றி, பௌத்த மக்கள் மிக மிகக் குறைவாக காணப்படக்கூடிய தமிழ் பிரதேசங்களிலும் விகாரைகள் நிர்மாணிக்கப்படுகின்றன. குறிப்பாக, யுத்த காலத்தில் தனியாரிடமிருந்து பெறப்பட்டு உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்த வலிகாமம் பிரதேசத்தில் இராணு-

வத்தினரால் புத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளமையை (Office of International Religious Freedom, 2020) இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இதேபோல நெடுந்தீவு பகுதியில் பௌத்த துறவியொருவர் இராணுவ அனுசரனையுடன் பௌத்த விகாரை ஒன்றை அமைத்தமை, கிளிநொச்சியில் உள்ள கோவில் பகுதியில் பௌத்த விகாரை அமைக்கப்பட்டமை போன்றவற்றை எடுத்துக்காட்டலாம் (Intetnional Studies for Ethnic Studies and Interntional Center for Human Rights Education, 2018).

எனவே, 30 வருடகால சிவில் யுத்தத்தின் ஊடாக இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையிலான சமூகநல்லிணக்கம் ஏற்கனவே பாதிப்படைந்துள்ள நிலையில் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் அதனை மீளமைக்க வேண்டிய அவசியம் காணப்படுகின்ற போதிலும் பௌத்த கடும்போக்குவாதிக-ளின் மேற்படி செயற்பாடுகளானது மேலும் இரு சமூகங்களுக்கு இடையிலான ஒற்றுமையின்மையையும் பேதத்தையும் ஏற்படுத்துவதுடன் அது நாட்டில் மேற்கொள்ளப்படும் அனைத்து நல்லிணக்க முயற்சி-களையும் சாவாலுக்குட்படுத்துகின்றது.

அதுமட்டுமல்லாது, இலங்கையில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான சமூக நல்லிணக்கத்-திலும் சிக்கல் தன்மைகள் காணப்படுகின்றன. இது முஸ்லிம்களின் அடையாளம் (Identity) குறித்த பிரச்சி-னையாகவே காணப்படுகின்றது. குறிப்பாக தமிழ்ப் போராளிகள் முஸ்லிம்கள் என்ற தனி அடையாள-த்தை நிராகரித்ததோடு முஸ்லிம்களை "இஸ்லாமிய தமிழர்கள்" என அழைத்தனர் (Imtiyaz & Saleem, 2015; Devotta, 2018). எனினும் Johansson (2019), இலங்கையில் சிங்கள் மொழியை பேசும் பெரும்பா-ன்மையான முஸ்லிம்கள் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறு இருப்பினும் முஸ்லிம்க-ளின் மத அடையாளத்தை தமிழர்கள் நிராகரித்தமையானது இவர்களுக்கிடையிலான உறவில் பிளவை ஏற்படுத்த காரணமாக அமைந்தது. இவற்றின் நீட்சியாக இலங்கையில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களு-க்கும் இடையிலான பல்வேறு பிணக்குகளும் தப்பபிப்பிராயங்களும் அவர்களுக்கு இடையிலான நல்லி-ணக்கத்தை வெகுவாகப் பாதித்தன. குறிப்பாக, திருகோணமலையிலுள்ள இந்து பாடசாலைக்கு முஸ்லிம் ஆசிரியைகள் அபாயா அணிந்து செல்வது குறித்த சர்ச்சையானது இந்துக்கள் முஸ்லிம்களின் மத கலாசாரத்தை கேள்விக்குட்படுத்துவதாக காணப்படுகின்றது. அத்துடன் யாழ்ப்பாணத்தில் கடும்போக்கு தமிழ் இந்துத்துவ அமைப்பொன்று முஸ்லிம்களின் மாட்டிறைச்சி விற்பனைக்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன், இலங்கை இந்துக்கள் மற்றும் பௌத்தர்களின் தேசமாகையால் இங்கு பசுக்கள் மதிக்கப்படுவதாகவும் அவற்றை கொல்ல முடியாது (Srinivasan, 2018) எனவும் குறிப்பிட்டிருந்தது. இத்தகைய நிலைப்பாடுகளா-னது உண்மையில் இந்து மற்றும் முஸ்லிம் மதப்பிரிவினருக்கிடையிலான விரிசலை ஏற்படுத்துவதுடன் நல்லிணக்க முயற்சிகளையும் நெருக்கடிக்குள்ளாக்குகின்றது.

அடுத்ததாக, பௌத்த கடும்போக்குவாதிகளினால் கிறிஸ்தவ மதத்தவருக்கு எதிராக இழைக்கப்படும் கடும்போக்குவாத செயற்பாடுகளினூடாக, பௌத்த மற்றும் கிறிஸ்தவ சமூகங்களுக்கிடையிலான நல்லி-ணக்கமும் பாதிப்படைந்துள்ளது. அந்தவகையில், தீவிர தேசியவாத பௌத்த அமைப்பான பொதுபல சேனா காலணித்துவ காலங்களில் கிறிஸ்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுக்கு போப் பிரான்சிஸ் மன்னிப்பு கேட்க வேண்டும் என கூறியிருந்தது (Schmaltz. 2019). மேலும், திட்டமிடப்பட்ட வகையில் 2013 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு கிறிஸ்தவ தேவாலயங்கள் தாக்கப்பட்டன. இவற்றுள் 2013 ஆம் ஆண்டு மார்ச் கொட்டாவ கிறிஸ்தவ தேவாலய தாக்குதல் மற்றும் 2014 ஆம் ஆண்டு ஜனவரி ஹிக்கடுவ கிறிஸ்தவ தேவாயல தாக்குதல் என்பன குறிப்பிடத்தக்கனவாகும். 2014 ஆம் ஆண்டு ஹிக்-கடுவ தாக்கதலானது பொது பல சேனா மற்றும் அதனோடு இணைந்த அமைப்புக்களின் மதகுருமார்க-ளின் தலைமைத்துவத்தினூடாக இடம்பெற்றுள்ளதாக நம்பப்படுகின்றது (Lanka Business Online, 2017 as cited in Yusuf & Sarjoon, 2019). மேலும், அரசாங்க விதிமுறைகளை மேற்கோள்காட்டி கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் வழிபாட்டுத்தளங்களை தடைசெய்து மூட முயற்சிகளும் நிகழ்வுகளும் இடம்பெறுவதாக மத உரி மை அமைப்புக்கள் கூறுகின்றன (Office of International Religious Freedom, 2020).

மேலும், 2015 இல் நல்லாட்சி அரசாங்கம் பதவியேற்றதிலிருந்து, தேவாலயங்கள், மதகுருமார்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான 190 க்கும் மேற்பட்ட வன்முறை சம்பவங்களும் மற்றும் 2017 ஆம் ஆண்டு கிறிஸ்தவர்களுக்கு எதிராக 20 வன்முறை சம்பவங்களும் பதிவாகியுள்ளதாக இலங்கையின் தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டமைப்பு வெளிப்படுத்தியுள்ளது (World Watch Monitor, 2017).

இவை தவிர, 2019 இல் இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் கிறிஸ்தவ-முஸ்லிம் மற்றும் பௌத்த-முஸ்லிம் உறவுகளுக்கிடையில் பாரிய விரிசலை ஏற்படுத்தியுள்ளதுடன், இலங்கையில் ஒரு சில குழுக்களிடையில் தோற்றம் பெற்றுள்ள இஸ்லாமிய கடும்போக்குவாதத்தையும் அடையாளப்படுத்துவதாக காணப்படுகின்றது. இது இலங்கையின் நீண்டகால சமூக நல்லிணக்க முயற்சிகளையும் திட்டங்களையும் சவாலுக்குட்படுத்தியுள்ளது. எனினும் மேற்படி தாக்குதலானது, இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற வந்த தொடர்ச்சியான துன்புறுத்தல்களுக்கு எதிரானவையாகவே முஸ்லிம் தேசிய தௌஹீத் ஜமாத் மற்றும் இலங்கை தௌஹீத் ஜமாத் போன்ற அமைப்புக்களால் கட்டமைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது (Khudaidad, 2019). எதுஎவ்வாறாயினும், இலங்கையில் ஒரு சில குழுவினரிடையே அல்லது அமைப்பினரிடையே இஸ்லாமிய பயங்கரவாத சிந்தனைகளின் ஆரம்பத்திற்கான ஒரு சாயல் வெளிப்பட்டு நிற்பதனை இத்தாக்குதல்கள் மூலம் அவதானிக்க முடிகின்றது.

இதற்கான முதல் அறிகுறியாக 2018 மாவனெல்லை பிரதேசத்தில் பௌத்த மற்றும் கிறிஸ்தவ சிலைகள் சேதப்படுத்தப்பட்டமையை (Keenan, 2019) தொடர்ந்து ஈஸ்டர் குண்டுத் தாக்குதலானது 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 23, ISIS எனப்படும் தீவிரவாத குழுவால் நிகழ்த்தப்பட்டது (New York Times, 2019 as cited in Morrison, 2020). எனினும் இக்குண்டுத்தாக்குத்தாக்குதல்களை மேற்கொண்டவர்கள் இலங்கையைச் சேர்ந்த தேசிய தௌஹீத் ஜமாத் என்ற இஸ்லாமிய அமைப்புடன் தொடர்புபட்டவர்கள் என்பதை அரசாங்கம் வெளிப்படுத்தியது (Aljazeera, 2019). எனவே இத்தாக்குதலுக்கு அடிப்படை தூண்டுதலாக மதச்சகிப்பின்மை (Selvaraj, 2019) காரணமாக அமைகின்றது எனக் கூறப்படுகின்றது.

மேற்படி, கிறிஸ்தவர்களுக்கு எதிராக கட்டமைக்கப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் இலங்கை முஸ்லிம் அமைப்பொன்று தொடர்புபட்டிருப்பது இதுவே முதன்முறையாகும். யுத்தத்திற்கு பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் மதக்கடும்போக்குவாதிகளினால் முஸ்லிம்கள் இலக்குவைக்கப்பட்டாலும், இலங்கை முஸ்லிம்கள் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் வரை அரசுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும் (Imtiyaz & Saleem, 2021). அதுமட்டுமன்றி, இலங்கை சனத்தொகையில் 10 சதவீதத்திற்கும் குறைவாகவே முஸ்லிம்கள் காணப்படுவதோடு குறித்த தாக்குதலுக்கு காரணமான அமைப்புக்களை பின்பற்றுபவர்கள் 2 சதவீதத்திற்கும் அதிகமானவர்களாக இருப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை (Devotta, 2019) என்பதும் குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும், மேற்படி பயங்கரவாதத் தற்கொலைத் தாக்குதலானது, கிறிஸ்தவர்களுக்கும் மற்றும் ஏனைய சமூகத்தினருக்கும் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் மீதும் அவநம்பிக்கை, வெறுப்புணர்வு மற்றும் சந்தேகம் போன்ற எதிர்மறையான உணர்வுகள் இயல்பாகவே ஏற்பட வழிவிட்டுள்ளது (Keenan, 2019). இந்நிலை முஸ்லிம் சமூகத்துடனான பரஸ்பர உறவில் சகவாழ்வில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமையினை இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றது.

இது தொடர்பான Office of the high Commissioner for Human Rights (OHCHR) அறிக்கையானது, ஏப்ரல் குண்டுதாக்குதல் சம்பவத்திற்கு பின்னர் முஸ்லிம் சமூகம் அதிகரித்த விரோதங்களை எதிர்கொள்வதாக குறிப்பிட்டுள்ளது. மேலும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு பலவீனமான மற்றும் ஒருங்கிணைக்கப்படாத பொறுப்புக்கூறல்களினால் நாட்டில் சில பகுதிகளில் தனிநபர்கள் மற்றும் சமூகங்கள் மீதான வன்முறைத் தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது (cited in United Nations Human Rights Office of the high Commissioner, 2019). இது குறித்த Amnesty International அறிக்கையின்படி ஈஸ்டர் தாக்குதலை தொடர்ந்து வடமேற்கு மாகாணத்தில் பல நகரங்களில் இஸ்லாமியர்களின் புனித மாதமான ரமழான் மாதத்தில் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டார்கள் எனவும் சமூக ஊடகங்களில் 'வெறுக்கத்தக்க பேச்சு' (Hatred speech) பதிவுகள் மூலம் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டதாவும் கூறப்படுகின்றது.

இதனைத்தொடர்ந்து, உலகளாவிய ரீதியில் பரவலடைந்த Covid-19 தொற்றினை அடிப்படையாகக் கொண்டும் இலங்கையில் முஸ்லிம் சமூகத்திற்கும் அவர்களின் மத நம்பிக்கைகளும் எதிரான பல விரோதச் செயற்பாடுகள் இடம்பெறலாயின. இதன்படி சில அரசியல்வாதிகளின் அனுசரனையுடன் தேசிய ஊடகங்கள் முஸ்லிம் சமூகத்தை தேசபக்தியற்ற மற்றும் பொறுப்பற்ற சமூகம் என விமர்சித்ததுடன், இலங்கையில் கொரோனா தொற்று பரவுவதற்கும் முஸ்லிம்களே காரணம் எனவும் குற்றம் சாட்டின

(Saleem, 2020 as cited in Imtiyaz & Saleem, 2021: Siddiqui & Nozell, 2021) மேலும், கொரோனா தொற்றால் இறந்த முஸ்லிம்களின் உடல்களை தகனம் செய்வது தொடர்பிலான பாரபட்சமான கொள்கைகளும் நிறுவப்பட்டன. உலக சுகாதார தாபனம் இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய அனுமதித்த வழிகாட்டுதல்களை புறக்கணித்து இந்த சர்சைக்குரிய விடயத்தை இலங்கை அமுல்படுத்தியது (Kapur, 2020). இந்த வலுக்கட்டாயமான தகனம் முஸ்லிம்களின் மத உரிமை மீறலாக அடையாளப்படுத்தப்பட்டது.

இவற்றில், கொரோனா பரிசோதனையின் எதிர்மறையான முடிவுகளைக் பெற்ற முஸ்லிம்களின் உடல்கள் பலவந்தமாக தகனம் செய்யப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன. அதுமட்டுமன்றி, தொற்று நோய்க்கு உள்ளாகி உயிரிழந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை அவர்களது சனத்தொகையையும் விட அதிகமாகக் காணப்பட்டமை குறித்து எந்தவொரு பொறுப்புக்கூறலும் சுகாதார தரப்பால் வழங்கப்படவில்லை. இது மருத்துவமனைகளில் செயற்படுத்தப்பட்ட பாரபட்சமான கொள்கைகளின் விளைவினதாக இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது (Mihlar, 2021). மேற்படி இஸ்லாமிய மத விழுமியங்களுக்கு எதிரான செயற்பாடுகளானது முஸ்லிம்களுக்கு மத்தியில் பௌத்த தேசியவாதிகள் மீதான கசப்புணர்வை ஏற்படுத்தியுள்ளதுடன் நல்லிணக்கத்திற்கான வாய்ப்புக்களை வலுவிழக்கச் செய்கின்றது.

மேலும், 2019 ஆம் ஆண்டு பதவியேற்ற அரசாங்கமானது 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதி ஆணைக்குழுவினை தாபித்து, அதன் தலைவாராக கலகொடஅத்த ஞானசார தேரரை நியமித்துள்ளது. இச்சட்டமானது சிறுபான்மை முஸ்லிம்கள் மீது அதிகளவில் கவனம் செலுத்தும் என நம்பப்பட்டது (Keenan, 2021). அந்தவகையில், இலங்கைப் போன்ற பல்லின மத கலாசார கட்டமைப்பினைக் கொண்ட நாடொன்றில் மேற்படி 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற தொனிப்பொருளும் அதற்கான ஆணைக்குழுவிற்கு சிறுபான்மை மக்களால் விரும்பப்படாத பௌத்த பிக்கு ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தமை இதுவரையிலான நல்லிணக்க செயன்முறையினை பின்நோக்கி தள்ளியுள்ளது. அதேவேளை பௌத்த தேசியவாத அரசியல் கட்சிகள், பௌத்த கடும்போக்குவாத குழுக்களுக்கு அரசியலில் ஆதரவினை வழங்கியிருப்பது (Hariharan, 2019) சில பௌத்த துறவிகள் வெளிப்படையாக மத மற்றும் இனவாதத்தை துாண்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளது. இதனால், பௌத்த துறவிகள் மத வெறுப்பு பேச்சு மற்றும் சிறுபான்மை சமூகங்கள் மீது வன்முறை செயல்பாடுகளை திணிப்பது, முழு தேசமும் தவறாக நடத்தப்படுவதற்கும் (Derric, 2021) சமூக நல்லிணக்கம் பாதிப்படைவதற்கும் பிரதானமான காரணமாக அமைகின்றமை ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. மேலும் இன மற்றும் மத ரிதீயிலான மேற்படி வெறுப்புணர்வுகளுக்கான காரணங்கள் பற்றி மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் 2019 அறிக்கையில் குறிப்பிடுவதன்படி, சந்தேகம், வதந்திகள், அரசியல் சூழ்ச்சிகள் மற்றும் குறைந்த பட்சம் சட்டத்தின் ஆட்சியை அச்சமின்றி நடைமுறைப்படுத்துவதற்கான திறன் அரச நிறுவனங்களின் தரப்பில் இல்லாமை போன்றவற்றின் கூட்டிணைவே காரணமாக அமைவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே, மேற்படி விடயங்களின் அடிப்படையில் நோக்கும் போது யுத்தத்திற்கு பின்னரான மதரீதியான கடும்போக்குவாதத்தின் எழுச்சிக்கு பௌத்த கடும்போக்குவாத அமைப்புக்களின் உருவாக்கம் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் காரணமாக அமைகின்றன. இதனால் சமூகங்களுக்கிடையிலான நம்பிக்கையை, கூட்டுறவு, மற்றும் மதச்சகிப்பின்மை என்பன இல்லாதொழிக்கப்பட்டு சந்தேகம், வெறுப்புணர்வு மற்றும் அச்சம் என்பன ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் யுத்தத்திற்கு பின்னரான இலங்கையில் பௌத்த - முஸ்லிம், பௌத்த - இந்து, இந்து - முஸ்லிம், முஸ்லிம் - கிறிஸ்தவ மற்றும் பௌத்த - கிறிஸ்தவ மதங்களுக்கிடையிலான உறவுகளில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளதுடன் அவற்றுக்கிடையிலான சமூக நல்லிணக்கமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளமையினை இவ்வாய்வு வெளிப்படுத்தி நிற்கின்றது.

## 6. முடிவுரை

இலங்கையின் பன்மைத்துவ சமூக அமைப்பும் சிவில் யுத்தத்திற்கு பின்னரான சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளும் இலங்கையில் சமூக நல்லிணக்கத்தின் அவசியம் குறித்த கருத்தாடலை பேசுப்பொருளாக்கியுள்ளது. எனினும், யுத்தத்திற்கு பின்னரான மத ரீதியிலான கடும்போக்குவாதத்தின் எழுச்சியானது இலங்கை சமூகங்களுக்கிடையில் சமூக நல்லிணக்கத்தினை உருவாக்குவதற்கு பதிலாக சமூகத்தில் விரிசலை ஏற்படுத்தியுள்ளது. அந்தவகையில், தேசிய அரசியலிலும் அரசியலமைப்பிலும் பௌத்த மதத்திற்கு முதலிடம் வழங்கப்படல், பெரும்பான்மையின மக்களுக்கு சிறுபான்மை

மக்கள் மீதான அச்சம், பௌத்த தேசியவாத குழுக்களின் எழுச்சியும் சிறுபான்மை மக்களுக்கு எதிரான வெறுப்பு பிரச்சாரங்களும், ஈஸ்டர் தினத் தாக்குதலும் அதன் பின்னரான சிறுபான்மை மக்களுக்கு எதிரான கலவரங்களும் மற்றும் மனித உரிமை மீறல்களும், வேறுபட்ட மதங்களுக்கிடையிலான வெறுப்புணர்வு, அவநம்பிக்கை மற்றும் மதச்சகிப்பின்மை போன்றவற்றினால் இலங்கையில் சமூக நல்லிணக்க கருத்தியல் பலவீனமடைந்துள்ளதுடன், சமூக நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. எனவே, இலங்கையில் மதரீதியிலான கடும்போக்குவாதத்தை கட்டுப்படுத்தி எதிர்மறையான உணர்வுகள் மற்றும் வெறுப்பு பேச்சுக்களை இல்லாது செய்து, மதச் சகிப்புத்தன்மையை ஊக்குவிப்பதன் மூலமே சமூக நல்லிணக்கத்தை அடையவும், மற்றுமொரு மோதலுக்கு வழிவகுக்காமலும் தடுக்க முடியும்.

**உசாத்துணைகள்**


Akebo, M. & Bastian, S. (2021). Beyond Liberal Peace in Sri Lanka: Victory, Politics and State Formation. Journal of Peacebuilding & Devolopment. 16(1). DOI: 10.1177/154231662097621

Aliff, S.M. (2015). Religion in Politics in the Post-War Sri Lanka: Special Reference to BBS. Kalam. IX.44-53.

Aljazeera. (2019, April. 25). Sri Lanka Bombings: Who are the National Thowheed Jamath?.https://aljazeera.com/amp/news2019.04/Sri-Lanka-Bombings-Who-are-theNational-Thowheed-Jamath.190424211451933.html.

Amnesty International, (2021, October. 2021). Sri Lanka: Authorities must end Violence and Discrimination against Muslims. https://www.amnesty.org/en/latest/news/2021/10/Sri-Lanka-Authorities-must-end-Violence-and-Discrimination-gainst-Muslims/

Aneez, S. & Shah, A. (2019, July. 7). Hardline Sri Lanka monk Calls for Buddihist Sinhalese Governmnet. https://www.reuters.com/article/us-sri-lanka-buddhist-idUSKCN1U2078

Barakat, S. (2019, Novemver. 21). Sri Lanka's Muslims Have Reason to fear the new Rajapaksa era. Aljazeera. https://www.aljazeera.com/openions/2019/11/21/-Sri-Lankas-Muslims-Have-Reason-to-fear-the-new-Rajapaksa-era.

Cenrter for Policy alternatives. (2016). CPA Stement on Recent Events Endangering Ethinc Harmony and Reconciliation. https://cpalanka.org/cpa-Stement-on-Recent-Events-Endangering-Ethinc-Harmony-and-Reconciliation/

Department of Census and Statistics- Sri Lanka, (2012). Statistical Abstract of the Democratic Socialist Republic of Sri Lanka. https://www.statistics.gov.lk/

Derric, R.F (2021, July. 16). The Misconception of Buddhism in Sri Lanka. https://www.colombotelegraph.com/index.php/the-misconception-of-buddhism-in-sri-lanka-its-misleading-paradigm-shift/

Devotta, N. (2018). Religious Intolernce in Post- Civil War Sri Lanka. Asian Affairs. 49(2). 278-300. DOI: 10.1080/03068374.1467660

Devotta, N. (2019, April. 24). The Religious Tensions behind the Attacks in Sri Lanka How Sectarianism Could Spin out of Control. Foreign Affairs (Council on Foreign Relations)

Farzana, H. (2021, April 12). What is behind the Anti- Muslim measures in Sri Lanka? Inciting ethno-religious animosity has become a means of survival for parts of Sri Lanka's political elite.Aljazeerahttps://www.aljazeera.com/openions/2021/04/12/what-is-behind-the-Anti-Muslim-measures-in-Sri-Lanka

Fazil, M. M. (2018, March. 2). Attacks against Minority Muslims in Ampara, Eastern

Sri Lanka. https://www.colombotelegraph.com/index.php/attacks-against-minority-muslims-in-ampara-eastern-sri-lanka/

Fazil, M. M. (2019). State-minority contestations in post-colonial Sri Lanka. Journal of Educational and Social Research, 9(4), 157-165.

Fernando, A., & Wiajayasiriwardhane, T. K. (2020) Identifying religious extremism-based threats in Sri Lanka Using Bilingual Social Media Intelligence, 2020 International Research Conference on Smart Computing and Systems Engineering (SCSE). PP 103-110, DOI: 10.1109/SCSE49731.22020.931391

Fowsar, M.A.M., Rameez, M.A.M., & Rameez, A. (2020). Muslim Minority in Post-War Sri-Lanka: A case study of Aluthgama and Digana Violences. Academic Journal of Interdisciplinary Studies. 9(6). DOI: https://doi.org/10.36961/ajjs-2020-0111

Gunatilleke G (2015) The Chronic and the Acute: Post-War Religious Violence in Sri Lanka. Colombo: International Centre for Ethnic Studies and Equitas - International Centre for Human Rights Education.

Hariharan, R. (2019). Role of Buddhism in Sri Lankan Politcs. https://www.google.com/amp/s/www.colombrtelegraph.com/index.php/role-of-buudhism-in-sri-lankan-politics/amp/

Imtiyaz, A.R.M & Saleem, A, M. (2021). Covid-19: Crossroads for Sinhala- Muslims Relations in Sri Lanka, Journal of Asian and African Studies¬ 1 (14). DOI: 10.1177/00021909621021873

Imtiyaz, A.R.M. & Saleem, A.M. (2015). Muslims in Post-war Sri Lanka: understanding Sinhala-Buddhist Mobilization against them. Asian Ethnicity. 16(2). 186-202. DOI: http://dx.doi.org/10.1080/14631369.2015.1003691

Imtiyaz, A.R.M. (2019). The Easter Sunday Bombings and the Crisis Facing Sri Lanka's Muslims, Journal of Asian and African Studies. Vol. 55(1) 3–16. DOI: 10.1177/0021909619868244

Imtiyaz, A.R.M. (2021, May. 22). Rajapaksa steps up Sri Lanka's anti- Muslim measures. www.eastasiaforum.org/2021/05/22/-Rajapaksa-step-up-Sri-Lankas-anti-Muslim-measures

Intetnional Studies for Ethnic Studies and Interntional Center for Human Rights Education. (2018). Inter-Religious Conflict in Four Districts of Sri Lanka. 2, Kynsey Terrace Colombo:8

Johansson, A. (2018, April, 26). Violent Buddhist Extremists are targeting Muslims in Sri Lanka. Https://www.google.com/amp/s/theconcersation.com/amp/violent-buddhist-extremists-are-targeting-muslims-in-sri-lanka-92951

Johansson, A. (2019, April, 22). Who are the Sri Lanka's Muslims?. Https://www.google.com/amp/s/theconcersation.com/amp/who-are-the-sri-lanka's-muslims-115825

Kamalasiri, V. (2019). Global War on Terrorism and the concept of Multiculturalism: A critical View. 5th ICCM - 2019, Faculty of Management Studies and Commerce, University of Jaffna.

Kapur, R. (2020, July. 7). Covid-19 in India and Sri Lanka: New Forms of Islamophobia. https://www.mei.edu/publications/Covid-19-in-India-and-Sri-Lanka:-New-Forms-of Islamophobia

Keenan, A. (2019, April. 23). Sri Lanka's Easter Bombings: Peaceful Coexistance Under Attack. https://https://www.crisisgroup.org/asia/south-asia/sri-lanka/-sri-lanka's-easter-bombings-peaceful-coexistance-under-attack

Keenan, A. (2021, December. 23). "One Country, One Law": The Sri Lankan state's hostility toward muslims grows deeper. https://www.crisisgroup.org/asia/south-asia/sri-lanka/%E2%80%9cone-country-one-law%E2%80%9D-sri-lankan-states-hostility-toward-muslims-grows-deeper.

Kudiadad, D. (2019, May. 23). Sri Lanka's persecuted Muslims are Turning Redical. https://www.google.com/amp/s/www.fairobserver.com/region/central-south-asia/sri-lanka-easter-sunday-attacks-sri-lankan-muslims-worls-news-37663/%famp.

McGilvray. B.D. (2016). Buddhist Extremists and Muslim Minorities. Oxford University Press

Mihlar, F. (2021). Islamophobia and Anti-Muslim hate in Sri Lanka. https://www.ohchr.org.issues/Islamophobia-and-Anti-Muslim-hate-in-Sri -Lanka.

Morrison, C. (2020). Post-Conflict Interfaith activities, Combatting Religious Extremism and Mass atrocity in Sri Lanka. Revista de Paz y Conflictos. 13(i). DOI: http:dx.doi.org/10.30827/revpaz.vl3i1. pp99-24

Office of International Religious Freedom, (2020) Sri Lanka Religious Freedom Report. https://www.state.gov/reports/2020-report-on-international-religious-freedom/sri-lanka/

Orjuela, C .(2019). Countering Buddhist radicalisation: emerging peace movements in Myanmar and Sri Lanka. Third World Quarterly, 41:1, 133-150, DOI: 10.1080/01436597.2019.1660631

Peiris, S. (2019). An introduction to religious pluralism in Sri Lanka. Isuru Creations.

Ramakrishna, k. (2021) Deconstructing Buddhist Extremism: Lessons from Sri Lanka. Religious 12:970. https://doi.org/10.3390/rel12110970

Rameez. A. (2017). Resurgence of Ethno- Religious Sentiment against Muslims in Sri Lanka: Recent Ant-Muslim Violence in Ampara and Kandy. Journal of Politics and Law. 4(11). DOI: 10.5539/jplV1N4P27

Sakki, M.B.S., & Fazil, MM. (2020). The Easter day bombing and crises faced by Muslims. kalam. 13(1),

Sarjoon, A. (2019). Muslims in maintain National Integration and Social Harmony in Sei Lanka: From Ancient Rulers to Post Civil War Context. Sri Lankan Journal of Arabic and Islamic Studies, 02

Schmaltz. M. (2019, April 22). Who are Sri Lanka's Christians?. https://theconversation.com/who-are-sri-lankas-christians-115799

Selavaraj, S. (2019, April. 22). Sri Lanka must Tackle the religious Intolerance that fueled Easter Attacks. httsps://www.newstatesman.com/word.2019/04/-Sri-Lanka-must-Tackle-the-religious-Intolerance-that-fueled-Easter-Attacks-2

Sharma, M. (2015). Social Harmony for Being Social. Global Journals Inc. (US). 15(6).

Siddiqui, J & Nozell, M. (2021, April. 29). Two years after Easter attacks, Sri Lanka's Muslim face backlash. Sri Lankan government ramps up restrictions on minority community. https://www.usip.org/publications/2021/04/two-years-after-easter-attacks-sri-lankas-muslims-face-backlash

Silva, N.C.R. (2017). Failure of Reconciliation in Sri Lanka and Risk of reproduction of war?. 7th International Conference on Building Resilience; Using Scientific Knowedge to inform policy and practice in disaster Risk reduction, ICBR2017, 27-29 November 2017, Bangkok, Thailand.

Singh, V. (2016). Promoting People's Well-Being and Social Harmony through Social Work Education. National Seminar on Cultural, Social & Technological Perspectives of Social Harmony. 1

Srinivasan, M. (2018, June. 09). The abaya and the Tensions in Sri Lanka's East. https://www.google.com./amp/s/www.thehindu.com/international/fear-of-the-abaya/article61827761.ece/amp/

Sumbulah, U & Purnomo, A. (2018). Building Social and Religious Harmony for Students in Indonesia: Study of Interfaith Harmony Forum's Role of Malang, East Java. In Proceedings of the 1st international Conference on Recent Innovations (ICRI 2018), pp 219-288. DOI: 10.5220/0009924302190228

United Nations Human Rights Office of the high Commissioner, (2019, August. 26). Preliminary Findings of Country visit to Sri Lanka by the Special Rapporteur on Freedom of Religion or Belief. https://www.ohchr.org/en/newsEvents/pages/displayNews.aspx?NewsID=24918&LangID=E

Wilson, A.J. (1989). The Break-Up of Sri Lanka: The Sinhalese-Tamil Conflict. Univ of Hawaii Pr

World Watch Monitor. (2017). Sri Lanka: over 20 attacks on Christians this year. https://www.worldwatch-monitor.org/2017/06/sri-lanka-20-attacks-christians-year/

Yusuf, M. A., & Sarjoon, A. (2019). Post-war Religious Violence, Counter State Response and religious harmony in Sri Lanka. Journal of Education and Social Research. 9(3). DOI: 10.2478/jesr-2019-0039

Zuhair A (2016) Dynamics of Sinhala Buddhist ethno-nationalism in post war Sri Lanka. Centre for Policy Alternatives, April. Availableat: http://www.cpalanka.org/wp content/uploads/2016/04/Dynamics-of-Sinhala-Buddhist-Ethno-Nationalism-in-Post-War-Sri Lanka.